# பத்திரிக்கை செய்தி

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் இயங்கும் பள்ளி / கல்லூரி மாணவ / மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள 10 **ஆண் மற்றும்** 14 **பெண் சமையலர் பணியிடங்கள் (ஊதிய விகிதம் ரூ.4800-10000 (தர ஊதியம் ரூ.1300)** நேர்காணல் மூலம் இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. விண்ணப்பதாரர்கள் (1) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். (2) சைவ மற்றும் அசைவ உணவு சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும் (3) வயது வரம்பு : 1.07.2017 தேதியில் (அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 முதல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். (ஆ) பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 18 முதல் 32 வயதிற்குள் இருக்க வேண்டும். (இ) இதர பிரிவினருக்கு 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். (ஈ) விண்ணப்பதாரர் அரியலூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகுதிகளுடன் அரியலூர் மாவட்டத்திலுள்ள விடுதிகளில் முழுநேர சமையல் பணி புரிய விருப்பம் உள்ளவர்கள் 1) பெயர் 2) தகப்பனார் பெயர் 3) பாலினம் 4) பிறந்த தேதி 5) அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) 6) கல்வி தகுதி 7) சாதி 8) முன்னுரிமை விவரம் (ஏதேனும் இருப்பின் குறிப்பிடவும் (விதவை / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளிகள் / கலப்பு திருமணம்) 9) வேலைவாய்ப்பு பதிவு விவரம் (இருப்பின்) 10) குடும்ப அட்டை எண் 11) பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்று ஆகிய விவரங்கள் மற்றும் வரிசை எண்.4 முதல் 10 வரை உள்ள ஆவணங்களுக்கு சான்று / நகல்களுடன் **மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், தரைத்தளம், அறை எண்.9, அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகம், அரியலூர் மாவட்டம்** என்ற முகவரியில் **31.03.2017 பிற்பகல் 5.00 மணிக்குள்** கிடைக்கும் வகையில் விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் தகவல் பலகையில் ஒட்டப்பட்டிருக்கும். மேற்காணும் காலக்கெடுவிற்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது. கூர்ந்தாய்வுக்கு பின் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும், அதன் விவரம் தனியே தெரிவிக்கப்படும். விவரங்களுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் 2015-ம் ஆண்டில் சமையலர் பணியிடங்களுக்கு நேரடி நியமன முறைக்காக வெளியிடப்பட்ட அறிவிப்பு ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரூபன்தாஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.